<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

**அசல் வழக்கு எண். 342/2020**

இன்று 2023 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ம் நாள் இன்று இந்த **வா.சா.1** ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ஆர்.கண்ணன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கிரிதரன் |
| தந்தை பெயர் | : | சோமசுந்தரம் |
| வயது | : | 54 |

<u>முதல் விசாரணை</u>

வாதி ஆஜர். வாதி வழக்கறிஞர் ஆஜர். பிரதிவாதிகள் தோன்ற தரப்பினர்களாக உள்ளார்கள். தாவாவில் நான் வாதி.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

21.08.1959 ஆம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி டிரஸ்டின் பதிவு ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1**

25.10.2013 , 20.12.2013, 04.01.2014, 12.02.2014, 31.03.2014, 01.06.2015, 15.04.2016 ஆம் தேதிகளில் 1ம் பிரதிவாதி டிரஸ்டில் ஏற்படுத்தப்பட்ட தீர்மானங்கள் உண்மை நகல் **வா.சா.ஆ.2**

09.01.2019 ஆம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி டிரஸ்டின் தீர்மானம் ஒளி நகல் **வா.சா.ஆ.3**

27.03.2019 ஆம் தேதியிட்ட முருகப்பச் செட்டியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வசூலிக்கப்பட்ட கட்டண விவரங்கள் **வா.சா.ஆ.4**

05.04.2019 ஆம் தேதியிட்ட வாதி State Bank of India விற்கு அனுப்பிய கடிதம் மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ.5**

27.04.2019 ஆம் தேதியிட்ட வாதி, பிரதிவாதிகளுக்கு அனுப்பிய கடிதம் அஞ்சலக ரசீதுடன் **வா.சா.ஆ.6**

27.09.2016, 27.12.2018, 17.01.2019, 07.02.2019, 19.02.2019, 05.03.2019, 01.04.2019, 20.04.2019, 15.10.2020, 21.10.2020, 17.12.2020 தேதிகளில் இ மெயில் விவரங்கள் இந்திய சாட்சிய சட்டம் 65பி (4)ன் படி சான்றிதழுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவை அனைத்தும் **வா.சா.ஆ.7**

(ஆவணங்கள் குறியீடு செய்ய அவகாசம் கோரியதால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/– கே. ஆர். கண்ணன்
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.